குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 71/2020

அ.சா.3

2026–ம் ஆண்டு ஜனவரி 20–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | தொழில் | |
| தந்தை பெயர் | குமார் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.57 மணி,

Accused Arivalagan absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் காமாண்டப்பட்டியில் குடியிருந்து, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், ஓமலூர் – தாரமங்கலம் செல்லும் சாலையில் செங்கல் சூளை பிரிவு ரோடு அருகே போலிசார் வரைபடம் வரைந்து, விசாரணை செய்தார்கள். அந்த இடத்தில் விபத்து நடந்தது குறித்து விசாரித்தார்கள். நான் விபத்தினை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னேன்.

2. அதன்பின்பு, வரைபடம் வரைந்ததற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

**(அரசு தரப்பு சாட்சி சம்பவத்தை நேரில் பார்த்தது பொறுத்தமட்டில் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 17.12.2018 ஆம் தேதி இரவு 09.30 மணியளவில் ஓமலூர் – தாரமங்கலம் சாலையில்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.01.20 17:43:49 +0530

வேலகவுண்டனூர் செங்கல் சூளை பேருந்து நிறுத்தம் அருகே கணேசன் என்பவர் டி.என்.30 பி.வி.3444 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தாரமங்கலம் நோக்கி சாலையின் வலது பக்கமாக சென்றபோது, அதே சாலையில் அவருக்கு எதிர்திசையில் ஓமலூர் நோக்கி வந்த டி.என்.52 ஜே.2090 என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரி அறிவழகன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, கணேசன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி, விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு, விசாரணையின்போது கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. விபத்து குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரி. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் தயாரித்தபோது, எத்தனை போலிசார் அங்கு வந்திருந்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவில்லை. அப்போது சம்பவ இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.05 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.01.20 17:43:55 +0530